கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வேலப்பாடி பகுதி,
வேலூர் மாவட்டம்.



காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



அரக்கோணம் மேற்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



போளூர் மத்திய ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



சூலூர் பேரூர்,
கோவை தெற்கு மாவட்டம்.



சத்துவாச்சேரி வடக்குப் பகுதி,
வேலூர் மாவட்டம்.

### சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் சிலை நிறுவியதற்காக,

## கர்னல் ஜான் பென்னிகுயிக் குடும்பத்தினர் முதல்வருக்கு நன்றி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

இலண்டன், செப்.9-

முல்லைப் பெரியாறு அணையைத் தந்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது சிலையை, அவரது சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் நிறுவியதற்காக, அவரது குடும்பத்தினரும் செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தைச் சார்ந்தவர்களும் நன்றி தெரிவித்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**முல்லைப் பெரியாறு அணையைத் தந்து நம் மக்களின் மனங்களில் நிறைந்து வாழும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது சிலையை, அவரது சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் நிறுவியதற்காக, அவரது குடும்பத்தினரும் செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தைச் சார்ந்தவர்களும் நன்றி தெரிவித்தனர்.**

**நேரில் அவர்கள் வைத்த கோரிக்கைகளையும் பரிசீலித்து நிறைவேற்றுவோம்.**

**வாழ்க ஜான் பென்னிகுயிக் அவர்களது புகழ்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## கடலூரில் இலவச கண் பரிசோதனை முகாம்!

### கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*கடலூர், செப். 9 - கடலூர் தொகுதியில் தொடர் மருத்துவ முகாம், இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகளை கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. மேற்கொண்டு வருகிறார்.*

*இந்நிகழ்ச்சியில் டாக்டர் பிரவீன் அய்யப்பன் ஏற்பாட்டின் பேரில் கடலூர் புருகீஸ்பேட்டை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. முகாமை அய்யப்பன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.*

*மருத்துவக் குழுவினர் பல்வேறு வகையான கண் மருத்துவ சிகிச்சை தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொண்டனர்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர்,கவுன்சிலர் அப்பு, கவுன்சிலர் விஜயகுமார், பிரகாசம், முன்னாள் வார்டு செயலாளர் சீனிவாசன், கணபதி, சேகர், மாநகர தொழிற்சங்க துணை செயலாளர் அமர்நாத், பாலாஜி, அருள், கருணாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

### கீழத்திருப்பாலக்குடி - கழக மூத்த முன்னோடி - நினைவில் வாழும்

## சிங்கை சா.பழனிவேலு துணைவியார் ப.காயாம்பு அம்மாள் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

*மன்னார்குடி, செப். 9- கீழத்திருப்பாலக்குடி தி.மு.க. மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா.பழனிவேலு அவர்கள் மனைவியும் நினைவில் வாழும் கலையரசன், நலமுடன் பூங்கொடி, சரவணன் ஆகியோரின் தாயாரும், நினைவில் வாழும் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் இரா.சண்முகம், இரா.சீனிவாசன் ஆகியோரின் சகோதரியும் செய்தித்துறை ஓய்வு பெற்ற கூடுதல் இயக்குநர் ச.பாண்டியனின் மாமியாருமாகிய மன்னார்குடி காவேரி லாட்ஜ் உரிமையாளரான திருமதி ப.காயாம்பு அம்மாள் அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*தகவல் அறிந்து கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு கீழத்தியருப்பாலக்குடி அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு கீழத் திருப்பாலக்குடி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.*



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், திருப்புவனம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் 6.9.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி உட்பட பலர் உள்ளனர்.

### மின்துறை தனியார் மயத்தைக் கண்டித்து

## புதுவை 'இந்தியா' கூட்டணிக் கட்சியினர் போராட்டம்!

### தி.மு.க. - காங். எம்.எல்.ஏ.க்கள் கைது!

புதுச்சேரி, செப்.9–

யூனியன் பிரதேசங்களில் உள்ள மின் துறையை தனியார் மயமாக்க மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி யூனியன் பிரதேசமான புதுவையில் மின் துறையை தனியார் மயமாக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்தது. இதற்கு காங்கிரஸ் – திமுக கூட்டணி எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் தனியார் மயமாக்கல் ஒத்தி வைக்கப்பட்டது. அதே நேரத்தில் தனியார்மயத்தை எதிர்த்து புதுவை மின்துறை ஊழியர்கள், பொறியாளர்கள் இணைந்து போராட்டக் குழுவை ஏற்படுத்தி போராட்டங்களை நடத்தி வந்தனர்.

கடந்த 2021ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, என்.ஆர்.காங்கிரஸ், பாஜக அரசு அமைந்தது. அரசு பொறுப்பேற்றவுடன் மீண்டும் மின் துறையை தனியார் மயமாக்க முயற்சிகள் நடந்தது. இதை எதிர்த்து புதுவை மின்துறை போராட்டக்குழுவினர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் சென்னை ஐகோர்ட் மின்துறை தனியார்மயம் டெண்டர் விட இடைக்கால தடை விதித்துள்ளது. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் சமீபத்தில் அதானி நிறுவனம் புதுவை மின் துறையின் 100 சதவீத பங்குகளை வாங்கியுள்ளதாக தகவல் பரவியது. ஆனால் இதை மின்துறை அமைச்சர் நமச்சிவாயம் முற்றிலுமாக மறுத்தார். மின்துறை தொடர்பான வழக்கு ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ள போது எப்படி அதானி நிறுவனம் வாங்க முடியும்? அதானி நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். இருப்பினும் இந்தியா கூட்டணி கட்சிகள் மின்துறையை ரகசியமாக அதானி நிறுவனத்திற்கு தாரை வார்த்து விட்டதாக தொடர்ந்து புகார் கூறி வருகின்றனர். மின்துறை தனியார் மயமாக்கலை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் ஊர்வலமாக சென்று ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என அறிவித்தனர்.

இதற்காக நேற்று காலை 9 மணியிலிருந்து அண்ணா சாலை, காமராஜர் சிலை சந்திப்பில் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் ஒன்று கூடினர். ஊர்வலத்துக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, முன்னாள் முதல் அமைச்சர் நாராயணசாமி, இந்திய. கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தேவபொழிலன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஊர்வலம் நேரு வீதி வழியாக ஆளுநர் மாளிகை நோக்கி வந்தது. ஊர்வலத்தை போலீசார் நேரு வீதி, கேன்டீன் வீதி சந்திப்பில் பேரிகார்டு அமைத்து தடுத்தனர். இதையடுத்து ஊர்வலத்தில் வந்த தலைவர்கள் பேரிகார்டு மீது ஏறி கோஷம் எழுப்பினர். தொடர்ந்து போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர்.

ஊர்வலம், போராட்டத்தில், திமுக எம்எல்ஏக்கள் அனிபால் கென்னடி, சம்பத், செந்தில்குமார், காங்கிரஸ் எம்எல்ஏ வைத்தியநாதன், முன்னாள் அமைச்சர்கள் ஷாஜகான், கந்தசாமி, திமுக அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், முன்னாள் எம்எல்ஏக்கள் அனந்தராமன், கார்த்திகேயன், பாலன், நந்தா. சரவணன், காங்கிரஸ் சார்பில் சீனியர் துணைத் தலைவர் தேவதாஸ், பொதுச் செயலாளர்கள் தணுசு, கருணாநிதி, திமுக சார்பில் துணை அமைப்பாளர்கள் குமார், தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, லோகையன், ஆறுமுகம், காந்தி, அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், தங்கவேலு, வேலவன், சண்முகம், இளம்பரிதி, கோகுல், செந்தில்வேலன், பழநி, பிரபாகரன், கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், சீதாராமன், திராவிடமணி, பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், சவுரிராஜன், சக்திவேல், மணிகண்டன், தியாகராஜன், சிவக்குமார், வடிவேல் இளஞ்செழிய பாண்டியன், கலிய.கார்த்திகேயன், கலைவாணன், ராதாகிருஷ்ணன், சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.பி. மணிமாறன், அண்ணா அடைக்கலம், பரிமளம், குலசேகரன், ரமணன், கோதண்டபாணி, ஆறுமுகம், சங்கர், செந்தில் முருகன், ரவிச்சந்திரன், மதிமாறன், முஹம்மது ஹாலித், டாக்டர் ஆனந்த் ஆரோக்கியராஜ், தமிழசரன், முகிலன், சுமதி, இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் சேது செல்வம், தினேஷ் பொன்னையா, மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் முருகன், பெருமாள், ராஜாங்கம் மற்றும் திரளான தொண்டர்கள் பங்கேற்றனர். போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு தீயணைப்பு துறை அலுவலகத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

### கீழத்திருப்பாலக்குடி – கழக மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா.பழனிவேலு துணைவியார்

## ப.காயாம்பு அம்மாள் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 9–

கீழத்திருப்பாலக்குடி - கழக மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா.பழனிவேலு அவர்களின் துணைவியார் மறைவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:-

கீழத்திருப்பாலக்குடி தி.மு.க. மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா. பழனிவேலு அவர்கள் மனைவியும், நினைவில் வாழும் கலையரசன், நலமுடன் பூங்கொடி, சரவணன் ஆகியோரின் தாயாருமான, திருமதி ப.காயாம்பு அம்மாள் அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்தினேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



சாயல்குடி கிழக்கு ஒன்றியம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 300 பேர் அக்கட்சியிலிருந்து விலகி அமைச்சர் ஆர் எஸ் ராஜ கண்ணப்பன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியினை ஒன்றிய செயலாளர் குலாம்முகைதீன் ஏற்பாடு செய்திருந்தார்.